


திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் வாடகைக்கு விடுவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்கள்.

## மெட்ரோ ரெயில் பயணிகளுக்கு

# விமானநிலையம், திருமங்கலம் ரெயில் நிலையங்களில் வாடகை மோட்டார் சைக்கிள் அறிமுகம்

சென்னை, பிப்.28-

சென்னை விமானநிலையம், திருமங்கலம் ரெயில் நிலையங்களில் வாடகை மோட்டார் சைக்கிள் சேவை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

### மெட்ரோ ரெயில் நிலையத்தில் சேவை

சென்னையில் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்யும் பயணிகள், ரெயில் நிலையத்தில் இருந்து அருகில் உள்ள பகுதிகளுக்கு சென்று திரும்புவதற்காக சைக்கிள் சேவை திட்டத்தை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் ரெயில் நிலையங்களில் அறிமுகப்படுத்தி உள்ளது. குறிப்பாக கோயம்பேடு பஸ் நிலையம், வடபழனி, அசோக்நகர், ஈக்காட்டுத்தாங்கல், பரங்கிமலை, ஷெனாய்நகர், மற்றும் நேரு பூங்கா உள்ளிட்ட ரெயில் நிலையங்களில் இந்த சைக்கிள் சேவை திட்டம் செயல்பட்டு வருகிறது.

பயணிகளுக்கு தற்போது 120 சைக்கிள்கள் மூலம் சேவை அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்து இருப்பதால் கூடுதலாக 50 சைக்கிள்கள் வாங்க மெட்ரோ ரெயில் நிறுவனம் முடிவு செய்து அதற்கான நடவடிக்கையில் இறங்கி உள்ளது.

### பயணிகளுக்கு மோட்டார் சைக்கிள்

இந்த திட்டத்தை தொடர்ந்து ரெயில் நிலையங்களில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் சேவையை மெட்ரோ ரெயில் நிறுவனம் எஸ்.எப்.ஏ. மோட்டார் சைக்கிள் வாடகைக்கு விடும் நிறுவனத்துடன் இணைந்து தொடங்கி உள்ளது. முதல் கட்டமாக விமானநிலையம் மற்றும் திருமங்கலம் ஆகிய 2 ரெயில் நிலையங்களிலும் தலா 10 மோட்டார் சைக்கிள்கள் மூலம் சேவை தொடங்கப்பட்டு இருக்கிறது. பயணிகளிடம் இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்து உள்ளது.

இதுகுறித்து மோட்டார் சைக்கிள்களை வாடகைக்கு விடும் நிறுவன உரிமையாளர் சையத் கூறியதாவது:-

### ஆலந்தூர், சென்டிரல்

சென்னையில் கோடம்பாக்கம், காரப்பாக்கம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய 3 இடங்களில் மோட்டார் சைக்கிள்களை வார மற்றும் மாத அடிப்படையில் வாடகைக்கு விட்டு வருகிறோம். தற்போது முதல் முறையாக சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களான விமானநிலையம் மற்றும் திருமங்கலம் ஆகிய ரெயில் நிலையங்களில் மணிக்கணக்கில் வாடகைக்கு விடும் திட்டத்தை தொடங்கி உள்ளோம்.

இதற்கு நல்ல வரவேற்பு இருப்பதால் ஆலந்தூர் ரெயில் நிலையத்திலும், வரும் ஏப்ரல் மாதம் முதல் சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்திலும் மோட்டார் சைக்கிள் வாடகைக்கு விடும் திட்டம் தொடங்கப்படுகிறது.

### வாடகை கட்டணம்

ஸ்கூட்டி வண்டிக்கு 2 மணி நேரத்துக்கு ரூ.115, நாள் வாடகை ரூ.450 வசூலிக்கப்படுகிறது. இதேபோன்று வாகனங்கள் 2 மணி நேரம் மற்றும் நாள் வாடகை அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. குறிப்பாக பஜாஜ் டிஸ்கவர், ஹீரோ ஹோண்டா, ஹோண்டா, யமஹா போன்ற மோட்டார் சைக்கிள்களுக்கு ரூ.125 மற்றும் ரூ.500, பஜாஜ் பல்சர், ஹோண்டா யூனிக்கான் ரூ.200 மற்றும் ரூ.800, பஜாஜ் அவென்ஜர் ரூ.225 மற்றும் ரூ.900, ராயல் என்பீல்டு ரூ.350 மற்றும் ரூ.1,400.

ஹார்லி டேவிட்சன் ஸ்டிரீட் மோட்டார் சைக்கிள் நாள் வாடகைக்கு மட்டும் விடப்படுகிறது. இவை ரகத்திற்கு தகுந்தவாறு ரூ.5,500 மற்றும் ரூ.8,500 என்ற அடிப்படையில் வாடகைக்கு விடப்படுகிறது.

மோட்டார் சைக்கிள்களை வாடகைக்கு எடுப்பவர்கள் ரூ.2 ஆயிரம் முன்பணம் செலுத்த வேண்டும். அத்துடன் அரசு வழங்கிய புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை மற்றும் ஓட்டுனர் உரிமத்தை கொண்டு வரவேண்டும்.

### ஹெல்மெட் வழங்கப்படும்

20 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு மொபட்டுகளும், அதற்கு மேல் உள்ளவர்களுக்கு மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்படுகிறது. பயணிகள் தான் மோட்டார் சைக்கிள்களுக்கு பெட்ரோல் போட்டுக் கொள்ளவேண்டும். ஹெல்மெட் நாங்கள் வழங்குகிறோம்.

எடுத்த இடத்தில் தான் மோட்டார் சைக்கிள்களை திருப்பி தர வேண்டும் என்பதில்லை. எங்களுடைய 5 மையங்களில் ஏதாவது ஒரு இடத்தில் வழங்கலாம் அல்லது சென்னையில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளுக்கு மோட்டார் சைக்கிள்களை கொண்டு சென்றால், அங்கு வந்து எங்கள் ஊழியர்கள் எடுத்து செல்வார்கள். அதற்கு வாடகையுடன் கூடுதலாக ரூ.150 வசூலிக்கப்படுகிறது. பொதுமக்கள் வரவேற்பை பொறுத்து இந்த திட்டத்தை அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் விரிவுபடுத்த திட்டமிட்டு உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.